1974 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே 35 பேர்களுக்கு இடம் இருக்கிறது. 35 பேருக்கும் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களில் சில பேர்கள் வராமல் இருக்கக்கூடிய நிலைமை உண்டாகலாம். ஆகவே, இருக்கைகளின் கணக்குப்படி 35 பேர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஜோதி அம்மையாரை உட்காரவைத்தால் 34 பேர்களாகி விடும் என்று எதிர்க்கட்சியைக் குத்தலாகச் சொன்னார்கள். ஜோதி அம்மையாரை உட்கார வைத்தால் கூட நாங்கள் பார்வேர்டு பிளாக் 7 வோட்டுகளையும் வாங்கிவிடுவோம் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருமுறை வாங்கிய பழக்கத்தில் சொல்கிறார்கள். இனிமேல் அது நடக்காது என்பதை உறுதியாகத் தெரிவித்து கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. ஏ. ஆர். பெருமாள்: அம்மையார் அவர்கள் மிக வேகமாக எழுந்து 7 பேர்கள் வோட்டுகளை வாங்கிவிடுவோம் என்று சொன்னார்கள். ஒரு வோட் கூட அம்மையார் வாங்க முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

(உ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்க அனுமதி கோரும் தீர்மானத்தைப் பேரவைத் தலைவரே பேரவையின் முடிவிற்கு விட்டிருக்கலாம் என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Mr. Speaker, Sir, I only want to refer to an amendment made by the last Rules Committee, namely, ' the motion shall be taken up for consideration immediately after the Question Hour. So we feel that after Question Hour, this must get top priority. That is one point.

Another point I would like to raise is that on receipt of the notice, etc., the person presiding over the Assembly—

அதாவது தங்களைப்பற்றி இப்படி ஒரு தீர்மானம் இருந்தாலும், இந்தத் தீர்மானம் இன்றைக்கு லிஸ்டில் போடப்பட்டிருப்பதன் காரணமாக தாங்களே தலைமை தாங்கிக் கொண்டிருக்கும்பொழுது தாங்களே இந்த மோஷனை வோட்டுக்கு விடலாம். ஏனென்றால்

ரூலில் அந்த முறைதான் இருக்கிறது. விவாதம் நடக்கும் பொழுது வேறு யாராவது வந்து உட்கார்ந்து நடத்த வேண்டுமே ஒழிய ரூல் 54 ரொம்ப கிளியர் ஆக இருக்கிறது. நீங்கள் பொதுவாகச் செய்தது நல்லதுதான். தங்களைப்பற்றி வந்திருக்கும்பொழுது தாங்களே தலைமை தாங்கக் கூடாது என்று கருதியிருக்கலாம். ஆனால் சட்டசபை ரூல்ஸில் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. எந்தத் தீர்மானம் வந்தாலும் அது ஆர்டர் பேபர் லிஸ்டில் இருந்தால் அந்த ஆர்டர் பேபரில் இருப்பதை வரிசையாக எடுக்கிற பொழுது யார் தலைமை தாங்குகிறார்களோ அவரே அதை அவையிலே கொண்டு வரவேண்டும் என்று இருக்கிறது. அது ஒரு பிரிஸீடெண்ட் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

இன்னொரு விஷயத்திலும் தங்களுடைய ரூலிங் இருந்தால் நல்லது

"motion shall be taken up for consideration immediately after the Question Hour."

என்று கிளியராக ரூலில் போடப்பட்டிருக்கிறது. பல முறை இதைப்பற்றி விவாதித்து ஸ்பீக்கர் ஏதாவது இம்மாதிரி ஒரு தீர்மானம் வருகிறபொழுது வேறு விஷயங்களை எடுத்துக் கொண்டு இதை ஒத்திப்போடுவதற்குரிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லித் தான் அதை மாண்டேட்டரியாக வைத்திருக்கிறோம். "shall be taken into consideration."

என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த மாதிரி ரூல் இருக்கிறபொழுது, யார் தலைமையில் இருந்தாலும் அவர்கள் ரூலிங் நம்மைக் கட்டுப்படுத்தும் என்று இருந்தாலும்கூட, இதை ஒரு முறை கரெக்ட் பண்ணவேண்டும் என்பதற்காகத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுபற்றி உங்களுடைய முடிவு தெரிந்தால் உதவியாக இருக்கும். இன்று இல்லாமல் போனால் கூட, நீங்கள் நாளைக்குக் கூட சொன்னால் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள்

கூறியிருக்கிற கருத்து ஆதரிக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. தீர்மானத்தை எடுத்துக் கொள்வதா இல்லையா என்று வருகின்ற போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கீழே இறங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. விவாதம் வரும்போதுதான் பேரவைத் தலைவர் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. தீர்மானத்தை எடுத்துக்கொள்ள சபை அனுமதிக்கிறதா இல்லையா என்பதை பேரவைத் தலைவரவர்களே இருந்து பார்த்துக் கொள்ளலாம். லீவ் கிரான்ட் ஆன பிறகு விதி 54 (2)

If leave of the House is granted, discussion on the resolution may follow immediately or the House may fix for its discussion a date not being more than seven days from the day on which leave is granted.

ஆக, தீர்மானத்தை எடுத்துக்கொள்வது என்று முடிவாகி விட்டால் அதிலிருந்து 7 நாட்களுக்குள் விவாதத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே 29-ம் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் தவறு இல்லை.

THIRU K. T. K. TANGAMANI : I think I have not made myself clear. The motion for leave has to be taken up immediately after question-hour.

தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டதில் தவறு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள சபை அனுமதிக்கிறதா இல்லையா என்பதை சபாநாயகரே இருந்து பார்த்துக்கொள்ளலாம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் அஜன்டாவில் வருவதில்லை. அஜன்டாவில் வராததால் அதை முதலில் எடுத்துக் கொண்டோம். கேள்வி நேரம் முடிந்தவுடன் அஜன்டாவில் வராததை எடுத்துக் கொள்வதில் தவறு இல்லை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாமல் அஜன்டாவில் உள்ளபடி முதலிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டால் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை விட்டுவிட வேண்டிவரும். அஜன்டாவில் கவன ஈர்ப்புத் தீர்மானம் இடம்

பெறவில்லை. ஆகையால் கேள்வி நேரம் முடிந்தவுடனே கால் அட்டன்ஷன் நோட்டீசை எடுத்துவிட்டு, அதன் பிறகு அஜன்டாவில் உள்ளபடி நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்திருக்கிறோம். அதில் தவறு இல்லை.

இன்னொன்று. பேரவைத் தலைவரே இருந்து தீர்மானத்தை சபை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறதா இல்லையா என்பதை பார்த்துக் கொள்ளலாம் என்று தங்கமணி அவர்கள் கருத்து சொன்னதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இதற்குப் பாராளு மன்றத்தில் ஒரு விதிமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

It has been held that consideration by the House of a motion for leave to move the resolution does not amount to consideration of the resolution for removal and it would not be unconstitutional if the Speaker or the Deputy Speaker, as the case may be, does not vacate the Chair while a motion for leave to move the resolution for his removal is under consideration in the House.

என்று இருக்கிறது. ஆனாலும்,

However, as a matter of propriety, rule 201 (1) provides that the Speaker or the Deputy Speaker, as the case may be, shall vacate the Chair even when a motion for leave to move the resolution is taken up.

என்று இருப்பதால் இந்த இடத்தை நான் விட்டு, வேறொருவரை அமரச் செய்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்:

ரூல் 53-ல்

the motion shall be taken up immediately after the question hour.

என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் அஜன்டாவில் இல்லாதது. அஜன்டாவில் இடம் பெறாத ஒன்றை கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். கேள்வி நேரம் முடிந்தவுடன் அஜன்டாவில் உள்ளபடி இன்னொரு நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டால் அஜன்டாவில் இடம் பெறாதது விடுபட்டுப்

போகும். ஆகவேதான் முதலிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, அதற்குப் பின்னால் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகின்றபோது 7 பேரை வாங்கியிருப்போம் என்று சொன்னார்கள். இது ஒரு உறுப்பினருடைய கௌரவப் பிரச்சனையாக இருக்கிறது. இந்த மன்றத்திலே உறுப்பினர்களை வாங்கிவிடுவோம் என்று சொல்வது பொதுமக்கள் மத்தியிலே தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். உறுப்பினர் ஒருவரை இந்த மன்றத்தில் வாங்கலாம், விற்கலாம் என்ற எண்ணம் பொது மக்களுக்கு ஏற்பட்டுவிடும். ஆகையால் அந்த வார்த்தைகளை சபை நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் சொன்னது ஓட்டுக்களை வாங்கிவிடுவோம் என்று. வாங்குவதிலும் விற்பதிலுமே கனம் அங்கத்தினருடைய எண்ணம் போய்க்கொண்டிருக்கிறது. எப்போதுமே இந்த எண்ணம் தானா? ஒரு ஓட்டு போய்விட்டால் 7 ஓட்டுக்களை வாங்கி விடுவோம் என்றுதான் நான் சொன்னேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: அம்மையார் அவர்கள் திரும்பத் திரும்ப பார்வேர்டு பிளாக் கட்சியைப்பற்றி சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் தெளிவாகச் சொல்கிறேன். வானம் பிளந்தாலும், இந்த பூமி பிளந்தாலும் பார்வேர்டு பிளாக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம்தான் நிற்கும் என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதைத்தான் நாங்கள் செய்வோம். மேலும் இப்படிப்பட்ட விளையாட்டை விளையாட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.